12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது</u>

# <u>கையெழுத்துப் பிரதி நூலக அமைப்புக் குருவாணை</u>

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)**

மெய்யான இந்துமத ஆண்டு <u>43,73,120</u> **ஆவணி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை


1. **“கையெழுத்துப் பிறதி நூலக அமைப்புக் குருவாணை”** - 20/07/1985இல் குருதேவர் அவர்கள் கோவில்பட்டி சித்தரடியான் இரமேசு என்பவருக்கு எழுதிய அஞ்சலின் நகல்.
2. **“தீர்மானங்களுக்குப் பதில்”** - 24/07/1985இல் குருதேவர் அவர்கள் மதுரை அடியான்களுக்கு எழுதிய கருத்து விளக்க அஞ்சலின் நகல்.
3. **“மண்டலப் பூசை வேண்டுகோள் மடலுக்குப் பதில்”** - 24/07/1985இல் குருதேவர் அவர்கள் அ.வி.தி. தலைமைச் செயலாளர் பரமாச்சாரியார் திரு சேவுகன் அவர்களுக்கு எழுதிய அஞ்சலின் நகல்.
4. **“மண்டலப் பூசையில் செயல்விளக்கத் திருவோலை”** - 25/07/1985இல் குருதேவர் அவர்கள் அ.வி.தி. தலைமைச் செயலாளர் திரு சேவுகன் அவர்களுக்கு எழுதிய அஞ்சலின் நகல்.
5. **“சித்தர் மகன், சித்தர் மகள் என்ற தகுதி பெறுவோர்க்கு அறிவுரைகள்”** - 02/05/1985இல் குருதேவர் நத்தம் சித்தரடியாள் திருமதி சுமதி அருணாச்சலம் அவர்களுக்கு எழுதிய குருபாரம்பரிய அறிவுரை அஞ்சல்.
6. குருதேவர் அவர்களின் மதுரைச் சுற்றுப் பயணத்திற்காகத் தயாரிக்கப்பட்ட அறிவிக்கையின் நகல்.

20/7/85,
செம்பியம்,
சென்னை-11.

# கையெழுத்துப் பிறதி நூலக அமைப்புக் குருவாணை

1. வன்ம ஆண்டு ஆடித்திங்கள் 5ஆம் நாள் சனிக்கிழமை கோவில்பட்டி இரமேசு B.E. க்கும் (27, வக்கீல் தெரு, கோவில்பட்டி 627710.) இவரது நண்பர்களான இரமேசு, மகாதேவனுக்கும் அருட்பட்டங்கள் வழங்கி கையெழுத்துப் பிறதி நூலகம் அமைப்பதற்காகப் பல கட்டுரைகள் அனுப்பப்படுகின்றன. இதேபோல், சிறுமுகை இராமசாமி (S/O இரங்கசாமி கவுண்டர், 6/446 திருவள்ளுவர் நகர், சிறுமுகை, கோவை 641302.) அவர்களுக்கும் பல நகல்கள் அனுப்பப்படுகின்றன.

2. இவர்கள் பொருளாதார வசதிக்கேற்ப டைப் அடித்தோ, சைக்குலோசுடைல் அடித்தோ, கார்பன் பேப்பர் வைத்தோ நகல்கள் தயாரிக்குமாறு குருவாணை இடப்படுகிறது. நகல்களின் கீழே, நகலெடுத்தவர்களின் அருட்பட்டங்கள், பெயர், முகவரி தெளிவாக இருக்க வேண்டும்.

3. இரண்டிரண்டு நகல்களாக தயாரிக்கத் தயாரிக்க சென்னை குருதேவர் முகவரிக்கு அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

4. இப்பொழுது அனுப்பியிருக்கும் நகல்களை ஒரு கோப்பில் அழகாகக் கோர்த்து வைத்துப் பலருக்கும் படிக்கத் தர வேண்டும்.

ஆனால், பத்திரமாக வீட்டிலேயே வைத்துக் கொண்டுதான், வருபவர்களுக்குப் படிக்கத் தர வேண்டும்.

5. யார் விரும்பினாலும் நமது நூலகத்திலுள்ள கட்டுரைகளுக்கு நகல் எழுதிச் செல்லலாம்.

நாம் இலக்கியப் புரட்சி, கருத்துப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, எண்ணப் புரட்சி, உணர்வுப் புரட்சி, சமுதாயப் புரட்சி, சமயப் புரட்சி, கலைப் புரட்சி, .... முதலிய அனைத்தையும் அன்பு வழியில், அமைதி வழியில், அற வழியில், அருள் வழியில், சமாதான வழியில், சமத்துவ வழியில், சகோதரத் தத்துவ வழியில், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு வழியில்.... ஆற்றவே விரும்புகிறோம். நம்மிடம் பொருளாதார வசதியில்லாததால் கையெழுத்துப் பிறதிகளாகத்தான் நமது செய்திகளையும், சிந்தனைகளையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் பரப்ப வேண்டியிருக்கிறது, பரப்ப வேண்டியிருக்கிறது, பரப்ப வேண்டியிருக்கிறது. இவற்றைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுங்கள். பலரையும் செயல்படச் செய்யுங்கள்.

தனிமரங்களாக இல்லாமல், ஒவ்வொருவரும் ஒரு தோப்பாக மாற முற்படுங்கள். பலரையும் இணைத்துப் பிணைத்துச் செயல்படுக! செயல்படுக! செயல்படுக! அதாவது, **அருளை மட்டும் வழங்கி <u>மதத்தால் இருளையும் இன்னல்களையும் வளர்க்காமல்</u>; அறிவையும் வழங்க வேண்டும், வழங்க வேண்டும், வழங்க வேண்டும்.**

6. <u>நம்மவர்கள் முழுநேரமும் சிவப்பு ஆடையை அணியக் கூடிய துணிவைப் பெற வேண்டும். மந்திர மந்தரங்களைப் பயிற்சி செய்ய வேண்டும். மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக</u>

வழங்க வேண்டும். **ஒவ்வொருவரும் தங்களை குருவின் பதிலியாக நினைத்துச் செயல்பட வேண்டும்.**

7. குருவாணைக்குக் கட்டுப்பட்டு உடனுக்குடன் குருவாணையைச் செயலாக்க முற்பட வேண்டும். அதாவது, நாம் ஒரு **மாபெரும் உலக இயக்கம்** என்ற உணர்வோடு ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். நாம் கண்மூடித்தனமான பூசாறிக் கூட்டமல்ல; சுரண்டல்கார மந்திறவாதிக் கூட்டமுமல்ல. அருளுலகில் பொதுவுடைமையையும், சமத்துவத்தையும், கூட்டுடமையையும் வழங்கும் மாபெரும் பதினெண் சித்தர்களின் வாரிசுகள் என்று ஒவ்வொருவரும் நம்பிச் செயல்பட வேண்டும்.

## ஏழு கட்டளைகள்

**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**
**20/7/85.**

**//உண்மை நகல்//**

**// மூல நகல் எழுதியது: அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தர் வாரிசு, சித்தரடியான் ம.செ.விசயராகவன் B.Sc. (S/O C.M. செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோயிலருகில், வேம்படிதாளம், சேலம் மாவட்டம் 637 504). //**

# <u>தீர்மானங்களுக்குப் பதில்</u>

(வீ.மா.ச. DRR No. 788/23-7-85)

சென்னை-11,
24-7-85.

1) திருப்பித் திருப்பி பல தீர்மானங்களின் மூலம் செந்துரை சுடாலினையும், அவரது மனைவி சரோசினி தேவியையும் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானங்கள் போடப்பட்டுள்ளன. இதன்படிப் பார்த்தால், குருதேவர் காலதாமதமாகவே அவர்களைக் காப்பாற்றுகிறார் என்று அனைவரும் எண்ணக் கூடியதாக இருக்கிறது. இது வருந்தத் தக்கது! கண்டிக்கத் தக்கது!

**<u>விளக்கம்</u>**:-

a) மருத்துவன் என்பவன் சண்டையில் அடிபட்டுக் காயமடைந்து வருகின்றவனுக்கு மருத்துவம் பார்த்துப் புண்ணை ஆற்றித்தான் தர முடியுமே தவிர **அடுத்தடுத்து அவனை யாரும் அடிக்காமல் பாதுகாத்து வர இயலாது. அது மருத்துவனின் வேலையும் அல்ல.**

b) அதாவது, மந்திரவாதிகளால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்குத்தான் நலமளிக்க முடியுமே தவிர, இவர்களைப் பாதிக்கின்றவர்களை, அதாவது மந்திரவாதிகளை தடுப்பதோ, அவரோடு சண்டை போடுவதோ நமது வேலை அல்ல.

c) **<u>பரிகாரம்</u>**:- சுடாலினும், அவரது மனைவியும் குறைந்தது 48 மாதங்களுக்கு முழுக்க குருதி வண்ண சன்னிதான உடையணிந்து காயந்திரி மந்தரம், சீவகாயந்திரி மந்திரம், கட்டு மந்திறம், அருட்சினை மந்திறம், சிவபுராணம், ... முதலியவைகளை ஓதவேண்டும். இவற்றின் மூலம் அன்றுடம் அருளைப் பெற்று பொருளுலக வாழ்வில்

ஈடுபடுவாரேயானால் இவர்களுடைய எதிரிகள், கற்பாறைகளில் விழுந்த மண்பாண்டங்கள் போல் நொறுங்கி விழுவார்கள். புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

2) தீர்மானங்களில் கெடுதல் செய்யும் மந்திரவாதிகளைத் தடை செய்ய வேண்டும், தடுக்க வேண்டும், எதிர்த்து அழிக்க வேண்டும், பழிக்குப் பழி வாங்க வேண்டும், ... என்ற கருத்தோட்டம் மிகுந்திருக்கின்றன. இக் கருத்தோட்டத்திற்காக மிகுந்த வேதனைப் படுகின்றோம். பதினெண்சித்தர்கள் ஆக்கப்பூர்வமான கலைகளையும், அழிவுப்பூர்வமான கலைகளையும் உருவாக்கியவர்களே ஆவார்கள். எனவே, பிறரை மன்னித்துத் திருத்த முற்படலாமே தவிர அல்லது தீங்கு செய்யும் மந்திரவாதிகளை செயல்படச் செய்யாமல் தேக்கநிலை பெறச் செய்யலாமே தவிர, அவர்களை அழித்தொழிக்கக் கூடாது. அதாவது **இயற்கையின் நீதிப்படி புள்ளிமானும் வரிவேங்கையும், பாம்பும் தவளையும், மீனும் கொக்கும், பருந்தும் கோழிக்குஞ்சும் போராடித்தான் தீர வேண்டும். அதாவது அமுதும் நஞ்சும், இருளும் ஒளியும் நிரந்தரமாக அழிக்க முடியாது. அழிக்கவும் கூடாது**.

3) சுடாலின் குடும்பத்திற்காக கணிக்கப்பட்ட கணிப்புக்கள் அனைத்தும் சரியானவையே! நிறைவானவையே! அவர்கள் நம்மை தஞ்சம் அடைந்து அ.வி.தி. பணியில் ஈடுபட்டதால்தான் அவர்களின் உயிருக்கோ, உடலுக்கோ பெரும் சேதம் விளையாமல் தடுத்து வந்திருக்கிறோம். இப்பேருண்மையே இராசுநாயுடுவாலும், ம.சி.இராமனாலும் மின்னல் கீற்றுப் போல் குறிக்கப்படுகின்றன. புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

4) அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, அரசயோகியாக, இராசிவட்ட நிறைவுடையாராக, இந்துமதத் தந்தையாக,

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறூராக இருக்கின்ற யாமே சுற்றுப்பயணங்களில் மந்திரவாதிகளால் தாக்கப்படுகின்றோம். திடீர் திடீரென்று ஏழு பருவத்துப் பெண்களையும் சத்திக் கோட்டைகளாக்கி பாதுகாப்புத் தேட நேரிடுகின்றது. எட்டுத் திசைகளிலும் எலுமிச்சம்பழங்களை அறுத்து எறியச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆடும் கோழியும் அறுத்து வழிநெடுகக் குருதிப் பொட்டுகள் வைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. உலகியலையே மீறியும், மாறியும், மறந்தும், துறந்தும் ஏந்தரீக தாந்தரீக மாந்தரீகப் பூசைகளைச் செய்து பாதுகாப்புக்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ...

இவைகளைப் பற்றி நம்மவர்கள் சிந்தித்தால் **கடலிலே அலைகளிருப்பது போல, அருட்கடலில் மந்திரவாதிகளின் அலைகள் இருக்கத்தான் செய்யும்; அந்த அலைகளின் மேலேதான் கப்பலைச் செலுத்தியாக வேண்டும்; அந்த அலைகளிலேதான் முத்தெடுத்தாக வேண்டும்; அந்த அலைகடலிலேதான் நீராடியாக வேண்டும்** - என்ற மாபெரும் தத்துவத்தால்தான் எல்லாம் வல்ல சித்தரே அச்ச, கூச்ச, ஆச்சரிய, மாச்சரியங்களோடு அடக்க ஒடுக்கமாகப் போதிய பரிகாரப் பாதுகாப்புக்களுடன் உலா வருகிறார் என்ற பேருண்மை விளங்கிடும். இனியாவது நம்மவர்கள் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

5) பதினெட்டாண்டு காலப் பயிற்சிகளையும், பதினெட்டாண்டு கால முயற்சிகளையும் செய்து முடித்த அருட்பேரரசர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கே நோய்கள் வருமா? அல்லது வரலாமா? அவர் மருந்துகள் சாப்பிடலாமா? ... குபேரனின் குடுமியையே தன் கையில் வைத்திருக்கும் குருதேவருக்கே பொருளாதாரச் சிக்கல்கள் வரலாமா? ... எமனையே நியமிக்கும்

அதிகாரம் படைத்த அரசயோகி மரண கண்டங்களைத் தவிர்க்க மாபெரும் முயற்சிகளை செய்யத்தான் வேண்டுமா? முக்காலத்தையும் முழுதும் உணர்ந்த ஞானச்சாரியார், ஞானத்தந்தை, அருட்பேரரசர் அவர்களின் வாழ்க்கையில் எதிர்பாராத சோதனைகளும், வேதனைகளும், சிக்கல்களும் வரலாமா? வரலாமா? வரலாமா? எல்லாம் வல்ல சித்தரான பதினெண்சித்தர் பீடாதிபதி ‘என் செயலாவது ஏதுமில்லை, எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே’ என்று கூறலாமா? கூறலாமா? கூறலாமா? உலகுக்கே படி அளக்கும் சிவபெருமானின் வாரிசான சித்தர் தனது தொண்டர்களிடம் பிச்சை கேட்பது போல் பொருள்களைக் கேட்டு வாழலாமா? … என்ற வினாக்கள் முக்கலும் முனகலுமாக, அரைகுறை பேச்சுக்களாக, சிலரின் விமர்சனமாக, பலரின் ஆராய்ச்சியாக, … இருந்து வருவதை அ.வி.தி. தலைமைச் செயலாளரே நினைத்துப் பார்க்காமல் போனது ஏன்? ஏன்? ஏன்? அல்லது நினைத்துப் பார்த்தும் வெளியில் கூறாமல் போனார்களா? ஏன்? ஏன்? ஏன்?

6) நண்பர்களே மேலே எழுப்பப்பட்டுள்ள அனைத்து விதமான வினாக்களுக்கும் ஒரே பதில்தான்.

**<u>இம்மண்ணுலகில் மனித வடிவில் பிறந்துவிட்ட காரணத்திற்காகத்தான்</u> சந்திர குலத்துச் சித்தன் முருகப்பெருமான் படைநடத்தி வேலோச்சிப் போரிட்டு வெற்றி பெற நேரிட்டது; சூரிய குலத்துச் சித்தனான இராமதேவன் மனைவிக்காக அழுது புலம்பி அரற்றி … வில்வளைத்துப் போரிட்டு வெற்றி பெற நேரிட்டது; சந்திர குலத்துச் சித்தனான (கிருட்டிணதேவன்) கண்ணதேவன் அநீதியை அழிக்க ஆயுதமே எடுக்காமல் பதினெட்டுக் கோடி அக்குரோணி சேனையையும் அழித்து வெற்றி பெற நேரிட்டது.**

இவர்களைப் போலவே சந்திர குலத்துக்கும், சூரிய குலத்துக்கும் விதையாக, வாரிசாக இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறாராகிய யாம் உலகியலுக்கேற்பவே அஞ்சியும் கெஞ்சியும், முடங்கியும் ஒடுங்கியும், ஏங்கியும் தேங்கியும், பதுங்கியும் ஒதுங்கியும், விலகியும் விலக்கியும், மறுத்தும் வெறுத்தும், மறந்தும் துறந்தும், இன்புற்றும் துன்புற்றும், வென்றும் தோற்றும், தயங்கியும் மயங்கியும், அழுதும் சிரித்தும், பகைத்தும் நகைத்தும், ... வகைவகையான வாழ்க்கைகளை வாழுகிறோம்! வாழுகிறோம்! வாழுகிறோம்! இதில் வெட்கப்படுவதற்கோ, வேதனைப்படுவதற்கோ ஏதுமில்லை! ஏதுமில்லை! ஏதுமில்லை!

யாம் நூலறிவாளனாகவும், வாலறிவாளனாகவும் வாழ்ந்து காட்டியே வருகிறோம். அனைத்தையும் ஆத்தாக்கள் தாத்தாக்கள் கையில் ஒப்படைத்தே ஊழியக் காரனாக வாழுகிறோம் யாம். யாம் வேலியில்லாப் பயிரல்ல! பயிரல்ல! பயிரல்ல! யாம் போலியும் இல்லை! கூலியும் இல்லை! கருங்காலியும் இல்லை! யாம் கூற வேண்டியதைக் கூற வந்திருக்கிறோம்.

எமக்குக் கிடைப்பவர்களில் எம்மிடம் நம்பிக்கையும், உண்மையான பற்றும் பாசமும் ஈடுபாடும் உடையவர்களுக்கு மட்டுமே இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்குகிறோம். மற்றவர்களுக்கெல்லாம் அருளுலகச் செல்வங்களை **ஏட்டுச் சுரைக்காயாகவே** வழங்குகின்றோம். இது எமது குற்றமல்ல! எமது செயல்பாடுகள்; "யாமார்க்கும் குடியல்லோம், எமனையும் அஞ்சோம் ..." என்ற அருட்கொள்கையின் விளக்கமாகவே இருக்கின்றன.

எம்மைச் சோதிப்பவர்கள் சோதிக்கப்படுவார்கள். நான்காவது யுகத்தில் நடைபெறும் நாடகத்தில் யாம் அருட்பேரரசராக வேடம்

பூண்டிருக்கிறோம்; அவ்வளவுதான். எவர் திருத்தம் பெற விட்டாலும் எமக்கு வருத்தமே வராது. யாம் எம்மால் முடிந்தவரை அனைத்துவகையான அருட்செல்வர்களையும் வாழையடி வாழையாக உருவாக்கும் விதைப்பண்ணையாக, நாற்றுப்பண்ணையாக இருக்கிறோம், இருக்கிறோம், இருக்கிறோம்.

எம்மைத் தெரிந்தால் தெரிந்து, புரிந்தால் புரிந்து, விரும்பினால் விரும்பி, ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எமக்குப் பிறகு 36 பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்ற இருக்கிறார்கள் என்பதை மட்டும் நினைவுபடுத்தி இவ்வஞ்சலை நிறைவு செய்கிறோம்.

**தலைவர், ஞானத்தந்தை, ஞானாச்சாரியார்,**
**குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறார்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி.**

**//உண்மை நகல்//**

**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

ஓம்

சென்னை-11,
24/7/85.

# மண்டலப்பூசை வேண்டுகோள் மடலுக்குப் பதில்

[வீ.மா.ச. D.R.R. No. 787 - 19.7.85]

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2) தங்களின் மிகப்பெரிய நெடிய அஞ்சல் கண்டு (12+6=18 பக்கம்) பேருவகை கொண்டோம்! நன்றி! அவ்வப்போது ஏதாவது ஒரு நாள் விட்டு ஒரு நாளாவது அஞ்சலட்டையின் மூலம் செய்தித் தொடர்பு கொள்வதே நல்லது. உடனுக்குடன் விளக்கங்களும், மாற்றுச் செயல்திட்டங்களும், தேவையான ஆணைகளும் வழங்க வசதியாக இருக்கும். நெடிய அஞ்சலை முழுமையாகப் படிப்பதும், அதற்கு முழுமையாகப் பதில் எழுதுவதும் திடீரென்று அலுவல்களை அடக்கி மடக்கி தேங்கச் செய்துவிடும். புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

3) அ.வி.தி. மூலம்தான் இ.ம.இ.யின் வளர்ச்சிகளை வளப்படுத்தவும் வலிமைப்படுத்தவும் முடியும். இதன் விளக்கமாகத்தான் ஒவ்வொரு கொடிக்கம்பத்திலும், மேலே அ.வி.தி. கொடியும், கீழே இ.ம.இ. கொடியும் பறக்க விட்டிருக்கிறோம்.

4) அ.வி.தி.யை முறையாகவும், நிறைவாகவும் ஆற்றியேயாக வேண்டும் என்பதற்காகத்தான் தனியானத் தலைமைச் செயலகம்; அ.வி.தி.க்கு என்றே தனிச் செயல்நிலையங்களும், அ.வி.தி.க்கு என்றே உறுப்பினர் பட்டியலும், அ.வி.தி. செயல்வீரர்களையே சித்தர்நெறி

பரப்புபவர்களாகவும்; அ.வி.திக்காகவே இலக்கியங்களும் ... இதுவரை செயலாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றை எண்ணிப் பாராமல், குருதேவர் 'அ.வி.தி. பணியை நிறுத்திவிட்டு, இ.ம.இ. பணியை மட்டுமே செய்யச் சொன்னார்' என்று எப்படி எண்ணினீர்கள்? சோதனை! சோதனை! வேதனை! வேதனை! ... நிதானமாகச் சிந்திக்கவும்.

5) அ.வி.தி.யின் மூலம்தான் இந்துமதத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் பெறச் செய்யமுடியும் என்ற தத்துவத்திற்காகத்தான் 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், 48 வகைச் சித்தர்களும், மற்ற அருளாளர்களும் இம்மண்ணுலகில் தோன்றுகிறார்கள். குருதேவரே அ.வி.தி.யின் வளர்ச்சிக்கு கட்டுப்பாடு விதிப்பதாக நம்மவர்கள் நினைக்க நேரிட்டது நமக்குள் இருக்கும் தெளிவின்மையைத்தான் காட்டுகிறது. வருந்துகிறோம்.

6) அ.வி.தி.யினால் நன்மையடைந்த மக்கள் நன்றியோ! ஆதரவோ! நிலையான தொடர்போ! நம்மவர்களோடு கொண்டிடவில்லை என்பது தங்களுக்கே புரியும்! புரியும்! புரியும்! எனவேதான், இன்று நாடெங்கும் உள்ள பசனைக் கூட்டங்கள் போல், பூசாறிகள் கூட்டம் போல், மாய மந்திரவாதிக் கூட்டம் போல் நாமும் செயல்பட்டு விடாமலிருக்க இ.ம.இ.யின் வரலாறுகளையும், தத்துவங்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும் வளமாக விளக்கியுரைத்து அ.வி.தி. பணி ஆற்ற வேண்டுமெனக் கூறினோம். இது தவறா?

அ.வி.தி. பணி மட்டும் வளருவதால் சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், புதுமை விரும்பிகள், புரட்சியாளர்கள் சித்தர்நெறிச் செல்வர்களையும், நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களையும், இயக்கங்களையும் மடமை மிகுந்தது, மூடநம்பிக்கைக்குரியது, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையானவை, பயனற்ற பழமைவெறி மிகுந்தது, ... என்று தாக்கி விமர்சிக்கிறார்கள். இதற்காகத்தான் நமது வரலாறு, மொழிக் கொள்கை, இனக் கொள்கை, பண்பாட்டுக்

கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம், பொருளாதாரச் சமத்துவம், மெய்ஞ்ஞானத் துறையில் விஞ்ஞானப் போக்கு, வடஆரிய மாயை எதிர்ப்பு மறுப்பு தடுப்பு விளக்கம், ... முதலியவற்றை இ.ம.இ. மூலம் விளக்க வேண்டும் என்று கூறினோம் யாம். இது புரியவில்லையா? அல்லது புரிய முடியவில்லையா?

7) அ.வி.தி. பணி புரிகின்றவர்களில் நூலறிவுடையோர், உலகியலறிவுடையோர், பூசைக் காரியங்களுக்கு அருளூறு பூசனைப் பொருள் தயாரிப்போர், சித்தர்நெறிச் செல்வர்களை ஒருங்கிணைத்துச் செயல்படச் செய்வோர், கொள்கை பரப்புவோர், நிதி திரட்டுவோர், ஆதரவு திரட்டுவோர், ஓலைநாயகமாகப் பணி புரிவோர், அ.வி.தி. நிலையம் காப்போர், அறிக்கைகள் அச்சிடுவதையும், அச்சிட்டதை வழங்குவதையும் கவனிப்போர் ... என்று பல தரத்தாரும், திரத்தாரும் இருக்கின்றார்கள். இவர்களின் பட்டியல்களில் இடம்பெற்று இவர்களுக்குச் சமமாகக் கருதப்படுபவர்கள்தான் ஞானக்காட்சி காண்பவர்கள், அருட்கணிப்புச் செய்பவர்கள், அருள்வழங்கி நலம் விளைவிப்பவர்கள். ஆனால், இந்த மூன்று வகைப் பணிகளைச் செய்பவர்கள் மட்டுமே சிறந்த சித்தியாளராக, தலைவர்களாக மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக, சித்தர்நெறியின் செயல்வடிவமாக ... எண்ணப்படுவதும், போற்றப்படுவதும், தலைமை நிலைகளைப் பெறுவதும் நிகழ்கின்றன! நிகழ்கின்றன! நிகழ்கின்றன!

இதன்படிதான், ஞானக்காட்சி ஆற்றலோ, அருட்கணிப்பு ஆற்றலோ, அருள்வழங்கல் ஆற்றலோ வளர்த்துக் கொள்ளாத பரமாச்சாரியார் போன்றோர் தலைவர்களாக மதிக்கப் படுவதில்லை! அருட்செல்வர்களாக நம்பப் படுவதில்லை! அதாவது சாமியாடிகளும், குறிகாரர்களும், அருளாளிகளுமே சித்தர்நெறி இயக்கங்களின் தலைவர்கள், மூலவர்கள், காவலர்கள், ... என்ற தவறான எண்ணம் வளர்ந்து விட்டது! வளர்ந்து விட்டது! வளர்ந்து விட்டது!

இதன் அடிப்படையில்தான் அ.வி.தி. செயல்வீரர்கள் குருவாணைகளை தங்களின் வசதிகளுக்கேற்ப மாற்றியும், குறைத்தும், திரித்தும், பதுக்கியும், ஒதுக்கியும், ஓரளவு எதிர்த்தும் கூடச் செயல்பட்டு வருகின்றார்கள். இப் பேருண்மை அனைவருக்கும் புரியவில்லையா? அல்லது புரிந்தும் வெளியே சொல்லத் துணிவில்லையா? குருவினால் அருளாற்றலைப் பெற்ற அ.வி.தி.யினரில் பலர் வீம்பும், ஆணவமும், அகம்பாவமும், தான்தோன்றிப்போக்கும் பெற்று விட்டார்கள். குருதேவரின் ஒப்புதல் இல்லாமலேயே தங்கள் விருப்பம் போல் நினைத்த இடங்களுக்கு நினைத்த போதெல்லாம் சென்று அ.வி.தி. பணியாற்றுகின்றார்கள். எனவே, நமது அமைப்புக்களின் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புக்களும் சிதைந்து சீரழிந்து விட்டன.

இந்த மாபெரும் தவறு நிகழாமல் தடுக்கப்பட வேண்டுமென்றால் இ.ம.இ. முழுமையான வளர்ச்சியைப் பெற்றேயாக வேண்டும். அதாவது பொதுமக்களிடையே “தமிழ்மொழி, தமிழினம், தமிழ்ப் பண்பாடு, ... முதலியவை யெல்லாம் உரிமையும், பெருமையும், விடுதலையும் பெறுவதற்குரிய வரலாறுகளும், இலக்கியங்களும், செயல்திட்டங்களும் இந்துமதம் என்கின்ற சமூக விஞ்ஞானமான சித்தர்நெறியால்தான் முடியும். இந்த சித்தர்நெறியை இ.ம.இ.தான் வளர்க்கிறது...” என்ற பேருண்மைகள் புரிந்தாக வேண்டும்! தெரிந்தாக வேண்டும்!

அப்பொழுதுதான், இன்றுள்ள சமய சமுதாய கலை இலக்கிய அரசியல் இயக்கங்களும், கழகங்களும், கட்சிகளும், சபைகளும், மன்றங்களும், குழுக்களும், கூட்டங்களும், ... போலியானவை, பயனற்றவை, உண்மையற்றவை, ஏமாற்றுத்தன்மை மிக்கவை; பதவி வெறியர்களும், புகழ் வெறியர்களும் பயன்படுத்தும் சாதனங்கள், தன்னல வெறியினர்களின் போர்வாள்கள் ... என்ற பேருண்மைகள் விளங்கிடும்.

எனவேதான், நம்மை மதவாதிகள், மடமைவாதிகள், மூடநம்பிக்கைக் காரர்கள், பழமைவாதிகள், சுரண்டல்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள், கற்பனைவாதிகள், ... என்று கேலியும் கிண்டலும் செய்து விமர்சிக்கும் முன்னரே; நாம் பெரியாரின் பாதையிலே, மார்க்சீயச் சிந்தனைச் சூழலில் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் போதிய சான்றுகளோடும், ஊன்றுகளோடும் விளக்கி வளரவேண்டும்! வளரவேண்டும்! வளரவேண்டும்!

இதற்காகத்தான் நம்மவர்களை இ.ம.இ. வளர்ச்சிக்காக அதிக முதன்மை கொடுக்குமாறு 'மண்டலப் பூசையின் மறு சிந்தனை' என்ற கட்டுரையில் வலியுறுத்தினோம். புரிந்தும் புரிவித்தும் செயல்படுக. உடன் நகலும் அதிகம் அனுப்புக. அ.வி.தி. செயல்வீரர் சோ.இரவீந்திரன் ஒரே குட்டையில் ஊறிய மட்டையாகத்தான் இருக்கிறார். தேவைப்படும் போது தந்தியடித்து அழைப்போம். அவசரமில்லை. அவர் விருப்பப்படி செயல்படட்டும். குருவாணை.

**குருதேவர், இந்துமதத் தந்தை, ஞானகுரு,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

[நகல்]

நகல் கீழ்க்கண்டவர்களுக்கு:-
1) வீ.மா.ச. நெ. சேவுகன், 2) வெ.செகதீசன், 3) M.C.இராமன், 4) மு.இராமானுசதாசு, 5) மோகனசுந்தரம்.

**//உண்மை நகல்//**

**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

ஓம்

பொன்னேரி,
25/7/85.

# <u>மண்டலப் பூசையில் செயல் விளக்கத் திருவோலை</u>

பேரன்புமிக்க பெருமதிப்பிற்குரிய பரமாச்சாரியார் அவர்களுக்கு கவிக்குமார் குருதேவர் சொல்ல எழுதும் அஞ்சல்.

1) நலம், நலம் காண ஆவல். யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2) தங்கள் கடிதத்தை நானும் குருதேவரும் படித்து செய்திகள் அறிந்தோம். இனிமேல் Personal என்பவைகளே உள்நாட்டு அஞ்சலில் அனுப்புகின்றோம். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகின்றேன். <u>குருதேவர் அவசரம் என்றதால்</u> உடனே கிடைத்த அஞ்சலட்டையில் எழுத நேரிட்டது. இனி நிகழாது! உறுதி!

3) தங்களுடைய மண்டலப் பூசை விளக்க மடலும், தீர்மான மடலும் நேற்று நள்ளிரவு கடந்தும், படித்து ஆராயப்பட்டு அவசர அவசியமாக சுருக்க விளக்கமாக மண்டலப் பூசைக்கு ஒரு பதிலும்; தீர்மானங்களுக்கு ஒரு பதிலும் ஆக எட்டுப் பக்கம் (4 + 4) பதில் அனுப்பப்பட்டன. போதுமான விளக்கம் இல்லையென்றால் உடனே கடிதம் எழுதினால் மேலும் விவரமாக அனுப்பப்படும்.

4) பிறமண்ணினரான பிருமணர்களிடமிருந்து **மெய்யான இந்து மதத்தை**க் காப்பாற்ற வேண்டுமென்றால் அவர்கள் புளுகி வைத்திருக்கும் புராணங்கள், இதிகாசங்கள், கதைகள், சாத்திறங்கள், மந்திரங்கள்

அனைத்திலும் உள்ள பொய்மைகளையும், பயனற்ற நிலைமைகளையும், மடமைகளையும், கற்பனைகளையும் விளக்கிக் காட்டுவதுதான் **<u>இ.ம.இ.</u>** அதே நேரத்து அருளை அநுபவப் பொருளாக **மெய்யான இந்துமதத்**தின் மூலம் பெறலாம் என்பதை செயல்நிலையில் விளக்கிக் காட்டி பிருமணத் தலைமைகளையும், மாயைகளையும் வெல்லும் போர்க்களப் பணியே **<u>அ.வி.தி</u>.** இந்த இரண்டும் சம அளவு நடந்தால்தான் முழுமையான வெற்றி கிட்டும்.

அப்படியல்லாமல் நமது குருதேவரின் தாத்தா கரூர்ப் பெரும்புலவர் காகபுசுண்டர் மருதையா பிள்ளை உருவாக்கிய சுவாமி கைவல்யமும், பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஈ.வெ.ரா.வும் பிருமணர்களின் மேல் கடுங்கோபம் கொண்டு காலமெல்லாம் திட்டினார்கள். அதனால் ஒரு பயனும் விளையவில்லை. இப்பொழுது நமது அ.வி.தி. நண்பர்களோ காலமெல்லாம் அருளை அநுபவப் பொருளாக வழங்கிக் கொள்கை விளக்கமும், குறிக்கோள் நோக்கமும் கூறாமல் செயல்பட்டு வருகின்றார்கள். இதுவும் பயனில்லை.

**மெய்யான இந்துமதத்**துக்கும், *பொய்யான ஹிந்துமதத்*துக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை வரலாற்றுப் பூர்வமாக, இலக்கியப் பூர்வமாக, செயல் பூர்வமாக விளக்குவதற்கு <u>இ.ம.இ.யும் அ.வி.தி.யும் இரு கண்கள் போல, இரு கைகள் போல, வில்லும் அம்பும் போல</u> இணைந்து செயல்பட்டேயாக வேண்டும். தாய் குழந்தைக்கு நிலாவைக் காட்டியும், பறவையைக் காட்டியும் சோறு ஊட்டுவது போல்தான் நாம் மக்களுக்கு அ.வி.தி. மூலம் இ.ம.இ. கருத்துக்களை பரப்ப வேண்டும்.

அதாவது யார் அருள்நலம் வேண்டி வந்தாலும் அவர்களின் பொருளாதார வசதிக்கேற்ப குறைந்தது ரூ.100, ரூ.75, ரூ.50, ரூ.25 என்று காணிக்கையை அவர்களே கவருக்குள் வைத்து "தங்களுக்கு அருளூறு பூசனைப் பொருட்கள் வேண்டும், அருளுலக செய்திகளும்

கிடைக்க வேண்டும், தங்கள் வீட்டிற்கு அ.வி.தி. வீரர்களை அனுப்பி அருள்நலம் செய்விக்க வேண்டும்” என்ற வேண்டுகோள் மடலும் அனுப்ப வேண்டும். [இது அருட்கணிப்புத் தொகையல்ல. எச்சரிக்கை!] குருதேவர் அந்த குடும்பத்திற்கும்; அங்கு அருட்பணி ஆற்றச் செல்லும் அ.வி.தி. செயல்வீரருக்கும் தேவையான பாதுகாப்புக்குரிய முடிகயிறோ, குங்குமமோ, பூசைமுறைச் செய்தியோ நேரடியாக அக்குடும்பத்திற்கு அனுப்பி விடுவார். [50 பைசா அஞ்சலுறை முகவரியோடு அனுப்ப வேண்டும்.]

இந்த பணத்தில் உறுதியாக ஓராண்டுக்குரிய குருதேவர் அறிக்கை அனுப்பப்படும். இப்படி ரூ.25/= அனுப்பி குருதேவரிடமிருந்து அருளூறு பூசனைப் பொருளும்; அனுமதியும் பெற்றவர்கள் இல்லத்திற்கு மட்டுமே அ.வி.தி. பணியாற்றச் செல்ல வேண்டும். இல்லையெனில் அவர்கள் நமது குருகுலம் வந்து செல்லட்டும். நம்மவர்கள் யாரும் செல்ல வேண்டாம்.

**குறிப்பு**:- எல்லோராலும் ரூ.25/- தர முடியாது என்று கூற வேண்டாம். அ.வி.தி. பணிக்காக குறைந்தது மூன்று நான்கு பேர் செல்கின்றீர்கள். அக்குடும்பத்திற்கு குறைந்தது ரூ.100/- செலவாகும். இது பொய்யல்ல. மேலும் குறிகாரர்கள் போல், பேயோட்டுபவர்கள் போல், உடுக்கை அடிக்கிறவர்கள் போல், சாமியாடிகள் போல் நம்மவர்கள் இரவு நேரங்களில் ஊர் ஊராகத் திரியத் தேவையில்லை. வீட்டில் குடும்பத்தாருடன் தங்கி மகிழலாம். வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ப நகல்கள் எழுதலாம். கடை வீதிகளிலோ, கோயில்களிலோ சென்று அமர்ந்து இரண்டு மூன்று பேர்களிடமாவது மெய்யான இந்துமதத்தைப் பரப்பலாம். ஆரிய நெறியைக் கண்டிக்கலாம்.

5) நாங்கள் அ.வி.தி.யைக் கண்டிப்பதால் இ.ம.இ.யின் தலைமைச் செயலகமும், பொறுப்பகமும், நிர்வாகக் குழுவும் சென்னையில் இருப்பதுதான் காரணமென்று கருத வேண்டாம். குருதேவராகிய

எமது வருகைக்காக பரமாச்சாரியாராகிய தாங்கள் தனிமனிதராக எதையும் செய்ய முடியாதவர் என்பதை உணர்கின்றோம். ஒப்புக் கொள்கின்றோம்.

..... ..... ..... *[தனி ஒருவருக்கான கருத்துக்கள் நீக்கப் பட்டுள்ளன.]*

எனவேதான், அ.வி.தி.க்கு மின்னல் வேகச் சுற்றுப்பயணமோ, பரபரப்பான சுற்றுப்பயணமோ தேவையேயில்லை. தலைமைப் பணியாளரும், தாங்களும், வசதி வாய்ப்புள்ள மற்றையோரும் குருகுலத்தில் தங்கி நகல்கள் எழுதுங்கள். குருகுலத்தைச் சுற்றியுள்ள சில மைல் பரப்பளவுக்கு உட்பட்ட கோயில்களில், இடுகாடுகளில், சுடுகாடுகளில் மட்டும் ஓய்வுக்கு ஏற்பப் பூசை செய்து வாருங்கள். எப்போது வேண்டுமானாலும் மதுரைக் கோயிலுக்குச் சென்று அ.வி.தி.க்குக் கருத்துப் பரிமாற்ற உரை நிகழ்த்துங்கள். எந்த அ.வி.தி. நிலையம் அழைத்தாலும் முழுமையான போக்குவரத்துச் செலவு கொடுத்தால் மட்டும் போங்கள். இல்லையெனில் வேண்டாம்.

எந்த ஊருக்கு யார் வீட்டிற்கு போவது என்றாலும்; நேரடியாக ரூ.25/- எமக்கு அனுப்பி அருளூறு பூசனைப் பொருள் எம்மால் அனுப்பப்பட்டு; அவர்கள் அதனைக் காட்டிய பின்பே செல்ல வேண்டும். இதுவே இறுதியான உறுதியான **குருவாணை**. மற்றபடி குருகுலத்தில் தங்கிப் பூசைகள் செய்யுங்கள். எந்த நேரமும், மந்திற ஒலி எழுப்புங்கள். அருள்நலம் வேண்டுபவர்கள் குருகுலத்தை நாடி தேடி வரட்டும். அவர்களுக்கு குருவாணையை விளக்கிடுங்கள்.

6) **அ.வி.தி. தலைமையகத்தின் தவறுகளும் முறையற்ற போக்குகளும்**:

(அ) பொதுமக்களிடம் தொடர்பு கொண்டு தேவையான நன்கொடையை வசூலிக்கக் கூடிய அ.வி.தி.; மாதம் ரூ.50/=, ரூ100/= வாடகை கொடுத்து மதுரை மாநகரில் அ.வி.தி. தலைமை

அலுவலகம் அமைக்கவே இல்லை, இன்று வரை பலமுறை குருவாணை இட்டும்.

(ஆ) தலைமை அலுவலக வாடகைக்கும், கையெழுத்துப் பிறதி நூலகத்துக்கும், அருட்கணிப்பு வேண்டுகோள்களுக்கும், அ.வி.தி. பயணங்களுக்கும், .... செலவுத் தொகையாக; கட்டாயமாக அருள்நலம் வேண்டுபவரிடமும், பிறரிடம் நன்கொடை கேட்டு வாங்கியும் நிதி திரட்டி அலுவலகத்தை இயக்கினால்தான் நமது அச்சிட்ட வெளியீடுகளையும், கையெழுத்துப் பிறதிகளையும், அஞ்சல்களையும்; நமது உறுப்பினர்களும், பொதுமக்களும் வந்து பார்த்துப் படித்துச் செல்ல முடியும்.

(இ) அ.வி.தி. (அருட்பணி விரிவாக்கத் திட்டம்) என்ற பெயரில் ஒரு கட்சியோ, இ.ம.இ. (இந்து மறுமலர்ச்சி இயக்கம்) என்ற பெயரில் ஒரு கட்சியோ, த.பெ.தி.க. (தந்தை பெரியார் திராவிடக் கழகம்) என்ற பெயரில் ஒரு கட்சியோ நாட்டுக்கும் ஏட்டுக்கும் தெரியாமல் போனதற்குக் காரணம் தலைமைச் செயலாளர் குடும்பத்தையும், குருகுலத்தையும் துறந்து ஊர் ஊராகப் பயணம் சென்றதுதான்.

(ஈ) தலைமைச் செயலாளர் குருகுலத்திலேயே தங்கி மந்திற ஒலிகளை எழுப்பிப் பூசைகளைச் செய்து வருகின்றவர்களுக்கு கருத்தையும், அருளையும் வழங்கி திருமந்திற ஓலைநாயகமாக கொலு வீற்றிருப்பாரேயானால் தன்னம்பிக்கையின்மையோ, தாழ்ச்சியோ வளர்ச்சி பெறாது. பெறவே பெறாது. இதுதான் அவர் செய்ய வேண்டியது.

(உ) அதாவது அண்மையில் ஆய்வுகள் நடத்தி முடிவுகள் எடுக்கப் பட்டதின் பேரில் மிகமிக அவசியம் ஏற்பட்டாலன்றி, பரமாச்சாரியார் குருதேவர் அநுமதியுடன் பயணம் மேற்கொள்ளட்டும். மற்றைய நாட்களில் வீட்டிலும், குருகுலத்திலும் இருந்து செயலாற்றட்டும். மதுரையில் நடக்கும் இயக்கக் கூட்டத்திற்கும், கோயில்களில் நிகழும் சொற்பொழிவுகளுக்கும், அ.வி.தி. நிலையங்களுக்கும் போக்குவரத்துச்

செலவு கொடுத்து அழைக்கும் போதும் தலைமைச் செயலாளர் என்ற முறையில் சென்று வரட்டும். யார் அ.வி.தி. பயணம் செல்வதென்றாலும், ஒரே ஒரு குருதேவர் ஏட்டுச் சந்தாத் தொகை, பூசைச் செலவுத் தொகை சேர்த்து சென்னைக்கு அனுப்பும் பொறுப்பு தலைமைச் செயலாளருக்கு ஒப்படைக்கப் படுகின்றது.

(ஊ) மாதப் பருவப் பூசையில் அல்லது வாரப் பூசைகளில் குருதேவர் அறிக்கை, மற்ற வெளியீடுகள், நூல்கள் ... இவற்றை ஒழுங்குபடுத்தி வரிசையாக குருகுலத்தில் வைக்கட்டும். ஒவ்வொன்றிலும் எவ்வளவு தேவை என்ற பட்டியலும் உடனே தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கட்டும்.

7) தாங்கள் அ.வி.தி. தலைமைச் செயலாளர் என்பதனால் தவறு செய்பவர்கள் சிலராக இருந்தாலும் சரி; பலராக இருந்தாலும் சரி; குற்றம் உங்களைத்தான் நாடி வரும்! எனவே, அவர்களை முடிந்தவரை திருத்தப் பார்க்கவும். இல்லையென்றால் தலைமைக்குத் தெரிவித்திடவும். வருந்த வேண்டாம். சேவுகன் என்ற தனிமனிதன் மீது குற்றம் சாட்ட வில்லை.

8) மதுரை ஒரு மாநகரம் என்பதால்; முழு நேர ஊழியர்கள் அங்கு தேவையில்லை. பகுதிநேர ஊழியர்கள் பலர் இருந்தாலே போதும்; அலுவலர்கள் மிகுந்த நகரத்துக்கு நமது பயிற்சி பெற்ற அடியான்களே போதும். பயிற்சிக் குறைந்தவர்களும் சென்னைக்கு வந்தால் ஒரு வாரம் அல்லது பத்து நாளில் முழுமையான பயிற்சி பெற்றுச் செல்லலாம். **யாம் விதைக்கும் அருள் விதையில் வேறுபாடு இல்லை. ஆனால், அவை விழுந்து முளைக்கும் நிலங்களின் வளங்களின் வேறுபாடுகளினால்தான் சத்தி சித்திகளில் வேறுபாடு உண்டு**. எனவே, நம்மவர்களில் பேராற்றல் விரும்புகின்றவர்களில் வசதி வாய்ப்புப்படி சென்னை வந்து தங்கி எம்மிடம் பயிற்சி பெற்றுச் செல்லலாம். அதாவது, இயற்கையான வளமில்லாத நிலத்துக்கு உரம் போடுவது

போல, அடிக்கடி களை எடுப்பது போல, பயிரைப் பாதிக்கும் பூச்சிகளைக் கொல்லுவது போல; ஒரு வாரமோ, பத்து நாட்களோ குருதேவரின் நேரடிக் கண்காணிப்பில் பயிற்சி பெறுவது நல்லது.

9) முழுநேர ஊழியர்கள் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால்தான் கிடைக்க வேண்டும். இதற்காக, தாங்களே தங்களிடம் வருபவர்களுக்கு நல்ல அருள் நலமும், வளமும் விளையுமாறு வாழ்த்துங்கள். உங்களின் பூசையில் முழுநேர ஊழியர்கள் வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுங்கள். உரிய பயன் கிடைக்கும். உங்களை வாழ்த்துகின்றோம்.

10) குருதேவர் வருகை பற்றி தாங்கள் எடுத்த முயற்சிகளும், அங்குள்ள நிலைமைகளும் உணர்வுப் பூர்வமாக நெஞ்சம் நெகிழ எழுதப் பட்டிருப்பதை உணர்கின்றோம். அனைத்தும் உண்மையே! அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்கின்றோம், ஒப்புக் கொள்கின்றோம். இனிமேல் தனி மனிதராக குருதேவரின் வருகைக்கு முயல வேண்டாம், முயல வேண்டாம், முயலவே வேண்டாம்.

**குறிப்பு**:- அனைத்தும் உணர்ந்த குருதேவர் அவசர, அவசியத்தை முன்னிட்டு மதுரை வந்து போவார். தேவைக்கேற்ப உங்களுக்கு அறிவிக்கப்படும். வசதி வாய்ப்புக்கேற்ப தாங்கள் வராமலிருக்கலாம், வரலாம். ஏனெனில் அப்பயணம் கட்சிப் பூர்வமானதல்ல, இயக்கப் பூர்வமானதல்ல. நமது இயக்கப் பூர்வமான வருகை ஆண்டுக்கு ஒருமுறை குருகுலத்தில் நிகழும். அதில் மாற்றமில்லை. மற்றபடி தேவைக்கேற்ப சொந்தப் பொறுப்பில் குருதேவர் வந்து செல்வார். கவலை வேண்டாம்.

குருதேவரின் சுற்றுப்பயணம் விரைவில் வட ஆற்காடு மாவட்டம், திருச்சி துறையூர் வட்டாரம், கரூர் வட்டாரம், தஞ்சைப் பெரிய கோயில் வழிபாடு (விண்வெளியிலிருந்து வந்திருக்கும் இயந்திர மனிதருக்கு வழிபாடு) ... முதலிய இடங்களில் நிகழ இருக்கின்றன. நிறைய ஆக்கப் பூர்வமான **மெய்யான இந்துமத** *பொய்யான*

<u>*ஹிந்துமத* வேறுபாடுகளும், சித்தர்களின் அருட்கொடையான மந்திறங்களும், தத்துவங்களும், இலக்கியங்களும்,</u> ... எழுதப் பட்டு வருகின்றன.

பட்டுப்புழு கூட்டுக்குள்ளிருந்து வளர்ச்சி பெறுவது போல் நாம் ஆங்காங்கே அவரவர் இடத்தில் தங்கி காகிதப் புரட்சி (Paper Revolution) செய்வோம். நாட்டிலுள்ள அனைத்து வகையான கட்சிகளின் மீதும் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதால் நாம் நிதானமாக வளர்ச்சிப் பெறுவதே நல்லது. புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக! அதாவது, நம்மவர்களில் யாரும் குடும்பத்தை மறந்தோ, உடல்நலத்தைத் துறந்தோ, கைப்பொருள்களை இழந்தோ, பட்டினி கிடந்தோ, ஆபத்துக்களை ஏற்றோ மிகப் பெரிய தியாகங்களைச் செய்து செயல்படத் தேவையில்லை. இன்றைய நிலையில் தேவையில்லை, தேவையில்லை. அது பயித்தியக் காரத்தனம், எனவே, “ஊதுகின்ற சங்கை ஊதுவோம்; அது விடியற போது விடியட்டும்” என்ற நிலையில் செயல்படுவதே நமது நிலை. வருந்த வேண்டாம்.

11) குருதேவர் என்று செயல்படுபவர்கள் மற்ற மடாதிபதிகள், பீடாதிபதிகளைப் போல், சன்னிதானங்களைப் போல் தொடர்ச்சியான வளர்ச்சியினைப் பெற்றவர்கள் அல்லர். அதாவது உலகியல் அனுபவமும், அறிமுகமும், பொருளாதார வளமும், ஆதரவு வலிமையும் ஒவ்வொரு குருதேவரும் அவரவர் காலத்தில் தாங்களே சம்பாதித்துக் கொள்ள வேண்டியது. எனவே, தாங்கள் விரும்புவது போல் பொதுமக்கள் குருதேவர் வருகையை விரும்பி ஏற்கக் கூடிய சூழ்நிலை நம்மவர்கள் கூறுகின்ற வரலாறு, இலக்கியம், தத்துவம், சித்தாந்தம், கொள்கை, குறிக்கோள், ... இவற்றைப் பொறுத்துத்தான் உள்ளது. அதாவது, இ.ம.இ.யின் வளர்ச்சியின் மூலம்தான் கலை, இலக்கிய, அரசியல், தொழில் தலைவர்களுக்கு செல்வாக்கு உருவாக்கப் படுவது போல்; நமது குருதேவருக்கும் மொழி உணர்வாலும், இன உணர்வாலும்,

நாட்டு உணர்வாலும், பண்பாட்டு உணர்வாலும்தான் உரிய பெரிய செல்வாக்கு ஏற்பட வேண்டும் என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும் நம்மவர்கள். இதற்கு பொதுமக்களை இலக்கியக் கூட்டங்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும், சொற்பொழிவுகளிலும்தான் சந்திக்க வேண்டும். புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

12) ..... ..... ..... *[தனி ஒருவருக்கான கருத்துக்கள் நீக்கப் பட்டுள்ளன.]*

அன்பு
கவிக்குமார்.

<u>நகலெடுத்தவர்</u>:

அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக் காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தரடியான், சித்தர் வாரிசு ம.செ. விசயராகவன், B.Sc., DTVT. (S/O C.M.செயராமன், 2/80 சுப்பிரமணியர் கோவிலருகில், வேம்படிதாளம் P.O., சேலம் மாவட்டம் - 637504.)

அன்பு நண்பருக்கு, இதற்கு உடனடியாக அவசர அவசியமாக 1+2=3x3=9 நகல்கள் தேவை. மூன்று மூன்றுகவாவது நகல் எழுத எழுத அனுப்பவும். குருவாணை.

அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம் ம.செ.விசயராகவன்.

**//உண்மை நகல்//**
**// மூலம்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். //**

# சித்தர் மகன், சித்தர் மகள் என்ற தகுதி பெறுவோர்க்கு அறிவுரைகள்

செம்பியம்,
சென்னை-11,
2-5-1985.

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார், ஞானத்தந்தை, ஞாறுச்சாரியார், இந்துமதத் தந்தை அவர்கள்,

சித்தர்மகள் சுமதி அருஞ்சலத்திற்கு (W/O இரா.அருஞ்சலம், திருவேங்குடி நஞ்சாயி அம்மன் சன்னிதானம், எம்.ஜி.ஆர்.நகர், நத்தம்-624401, மதுரை மாவட்டம்.) எழுதிய

**நலம் பாராட்டுத் திருவோலை. சித்தர் மகள் நிலை [கபாடபுரத்துக் கருவூறார் பரிந்துரை]**

1) சித்தர் மகள் சுமதி அருஞ்சலத்துக்கும், அவளது கணவன், தோழர் ... முதலிய அனைவருக்கும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் அனைத்து நலங்களும் வளங்களும் விளைந்திடுமாறு வாழ்த்தி ஞாறுச்சாரியார், இந்துமதத் தந்தை, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் விடுக்கும் நலம் பாராட்டுத் திருவோலை.

வாழ்க! வெல்க! வளம்பெறுக! பேரார்வம் வளர்ந்தோங்கிடச் சிறந்து செயல்பட்டிடுக.

2) இன்றைய நிலையில் தங்களுக்குப் பொருளாதாரச் சிக்கல் இருக்கலாம். கவலை வேண்டாம். அனைத்தும் விரைவில் சரியாகிடும்.

**<u>குறிப்பு</u>:-** நம்மிடம் வந்து பொருளாதாரச் சிக்கல் தீர்ந்தவர்கள் உடனேயே நம்மை மறந்தும், துறந்தும் சென்று விடுகிறார்கள். அருளுலகையே விட்டு விலகியும் சென்று விடுகிறார்கள். எனவேதான், தாத்தாக்கள் ஆத்தாக்கள் ... கால தாமதமாக அனைவரின் பொருளாதாரச் சிக்கல்களையும் படிப்படியாக அகற்றுகிறார்கள். வருந்த வேண்டாம். **<u>'நம்மை மறந்தவர்களையும், நாம் மறக்க மாட்டோம்'</u>** என்பதே சித்தர் நெறி. புரிந்து செயல்படுக!

3) 'சித்தர் மகள்' என்ற பெருமையைப் பெற்ற சுமதி அருணாசலம், இப்பெயருக்கேற்ப உரிமைகளை நிலைநாட்டும் வண்ணம் பேரார்வத்துடன் செயல்பட்டு வருவதை அறிந்து மிகவும் மகிழ்கின்றோம். பாராட்டுகின்றோம்! ஊக்குவிக்கின்றோம்!

**<u>குறிப்பு</u>:-** இந்த ஆர்வம் மென்மேலும் வளமுற்று வளர்ச்சி பெற்றே செல்ல வேண்டும். அப்பொழுதுதான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி, ... நிலைகளைப் பெறலாம்.

**'சரணாகதித் தத்துவம் என்பது போல் அனைத்தையும் பீடத்திடம், அருளுலக அரியணையிடம், தாத்தாக்கள் ஆத்தாக்கள் எனப்படுவோரிடம், குருவாக உள்ளவரிடம் ஒப்படைத்துச் செயல்படுபவரே பிறவித் துன்பங்களையும், உலக மாயைகளையும் வெல்ல முடியும்.'**

**- குருபாரம்பரியம்.**

இக்குருபாரம்பரிய வாசகத்தின் இலக்கியமாகத் திகழ்ந்திடு.

4) அருமை ஏற்பு மகளே! மிகப்பெரிய இடைவெளிக்குப் பிறகே சித்தர்கள் வெளியுலகோடு தொடர்பு கொள்வது நிகழ்கிறது. அதனால்தான்

**சித்தர்களின் வாழ்வியல், செயல்திட்டம், ஆற்றல் தத்துவம், ...** முதலியவை ஏறத்தாழ யாருக்குமே புரியாமல் இருக்கின்றன.

<u>குறிப்பு</u>:- **"உலகியலுக்கு அப்பாற்பட்டதாக, அச்சமும் கூச்சமும் நிறைந்ததாக, பயிற்சி செய்ய அரியதாக, இரகசியங்கள் நிறைந்ததாக ... சித்தர் நெறி இருக்கிறது. இவைகளைச் சித்தர் மகள்களும், சித்தர் மகன்களும்தான் செயலாக்க வேண்டும். அதாவது பீடாதிபதியிடமிருந்து அருளை அநுபவப் பொருளாகப் பெறுபவர்களே அருளுலக இருள்களை அகற்ற இயலும். இதற்கு இரகசியம் காக்கும் மன உறுதியும், அச்சம், கூச்சம், இச்சை, மாச்சரியம் கடந்து குருவாணைப்படி செயல்படும் சிந்தைத் தெளிவும், அனைத்தும் குருவே என்ற உணர்வும், குருவோடு இரண்டறக் கலந்து பேரின்ப நிலைகளை அடையும் பத்தியோகத்தைச் சித்தி செய்யும் ஆர்வமும், குரு நம்பிக்கையும், குரு பத்தியும் வேண்டும்."**

- குருபாரம்பரியம்.

இந்த வாசகத்தைப் புரிந்து செயல்பட வேண்டும்.

5) **"வானில் கணக்கற்ற விண்மீன்கள் தெரிந்தாலும் இருபத்தேழு (27) மட்டும்தான் பெயரிடப்பட்டுக் கணிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. இதுபோல், பீடாதிபதியால் எண்ணற்றோர் உருவாக்கப்பட்டாலும் கருவில் திருவுடையார் மட்டுமே முழுமையாக உருவாக முடியும். அதற்கு ஒவ்வொரு மனிதனும் தனியாகப் பிறக்கிறான், தனியாகவே இறக்கிறான் என்ற பேருண்மையினைப் புரிந்து; ஆண், பெண், சிறுவர், பெரியவர் என்ற வேறுபாடுகளையும் உரிமைகளையும் மறந்து; அச்ச கூச்சங்களை வென்று ... குருவை முழுமையாக ஏற்பவரே சித்தர்களின் உரிமை வாரிசாகிட முடியும். அதுவே பெறற்கரிய பேறு. ..."**

**- குருபாரம்பரியம்.**

இதனைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக!

6) **“சித்தர்களின் மகளாக, மகனாக அறிவிக்கப்படுவதற்கே! ஊழ்வினை, வினை, விதி, திருவுள ஒப்புதல், ... முதலியவை தேவை! தேவை! தேவை!... எனவே, முதலைப்பிடியாக, உடும்புப் பிடியாக, குரங்குப் பிடியாக ... குருவைப் பத்தியோடும் பாசத்தோடும் பற்றிக் குரு வேறு, தான் வேறு என்ற நிலைகளை கடக்க முயற்சிக்க வேண்டும். இல்லையேல் கண்ணிருந்தும் குருடராவார்; சித்தர் மகவாகும் பேறு பெற்றும் உரிய பயிற்சி செய்யார்.”**

**- குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம்.**

இந்த அருளுரையை நன்கு புரிந்து செயல்படுக.

7) மகளே! ‘நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமாம் மழை’ என்ற மூதுரைப்படி உன் மூலம் சித்தர் மகன், சித்தர் மகள் என்ற தகுதி பெறுவோர்க்கு அறிவுரைகள் இந்த 2-5-1985ஆம் நாள் குருநாள் வியாழனில் பிறக்கும் அஞ்சலில் விளைந்துள்ளன. உலக மக்களின் இருளுக்கு முடிவு கட்டும் பேரொளியாய்! ஆதவனாய் ... செயல்பட முயன்றிடு. உன்னை அருளுலகம் பூரிப்போடும், பெருமையோடும் கவனித்து வருகிறது. தயங்கவோ, மயங்கவோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! சோதனைகளை வென்றிடு!

8) அனைவருக்கும் வழியாக, வழித்துணையாக, விழியாக முழுத் திறமையோடு செயல்படு. அன்றாடம் காயந்திரி மந்திரம் கூறிடு. சிவபுராணம் பாடிடு. கட்டு மந்திறங்களைப் பயன்படுத்திடு. உன் அருட்பட்டத்துக்கு உரியவர்களைத் தவத்தில் அழைத்திடு. தேவையில்லாமல் பேசாதே! பக்குவமில்லாதவர்களோடு வீண்வாதம் புரியாதே! அருளுலக அநுபவங்களை அனைவரிடமும் கூறாதே. அன்றாடம் வாழ்க்கைக் குறிப்பு எழுது... வெற்றியுண்டாகட்டும்.

9) அடிக்கடி நேரடியாகக் குருதேவருக்கு அஞ்சலனுப்புக! தவமும் பூசையும் நிலையான பயனைத் தரும். மதுரை மாவட்டம் முழுவதும் அருளாட்சிக்குரியதாக்கிடும் பொறுப்பு சித்தர் மகளாகிய சுமதி அருணாசலத்திடம் ஒப்படைக்கப் படுகிறது. புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக! யாவும் வெற்றியாகட்டும்.

உடன் பதில்.

**அன்பு**
**ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**2.5.1985.**

**//உண்மை நகல்//**

<u>நகல் எடுத்தவர்:</u>
வைர நகைகள், வாகனவசதிகள், ஏவலாட்கள் ஏற்படக் கூடிய யோகம் உள்ளவர் என்றும் சித்தர் மகளாக ஏற்றுக் கொண்ட சித்தர் மகள் அ.சுமதி.

**//இதன் மூலநகல்: சித்தர் மகள் திருமதி சுமதி அருணாசலத்தின் கையெழுத்தில் இருந்தது.//**

# ஞானாச்சாரியார் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரரின் மதுரை வருகையின் போது (20.9.85 முதல் 23.9.85) வெளியிடப்பட்ட அறிவிக்கை.

1. மனிதனைக் கடவுளாக உயர்த்தும் **மெய்யான இந்துமதம்** பற்றியும், கடவுளை மனிதனாகத் தாழ்த்தும் *பொய்யான ஹிந்துமதம்* பற்றியும் புரியலாம்.

2. பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்**தான் தன்மானம், இனமானம், இன ஒற்றுமை, மொழியுரிமை, ... தழைக்கச் செய்யும்.

3. **மெய்யான இந்துமத** வழிச் சிந்தனையும், செயலுமே அனைத்து வகையான மிடிமை, அடிமை, ஏமாற்று, சுரண்டல், அவமானம், அவலக் கேவலம் ... முதலியன அனைத்தையும் அகற்றும்.

4. தன்னையறிந்து தலைவனைப் புரிந்து தன்னிறைவு வாழ்வு வாழத் தமிழ் வழி **மெய்யான இந்துமத** வாழ்வு வாழ்ந்திடுக!

5. சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் கூறுபாடுகளில் அன்னிய இருளகன்றிட **மெய்யான இந்துமத** ஆதவன் ஆயிரமாயிரம் தத்துவச் சித்தாந்த ஞானக் கதிர்க் கற்றைகளைப் பரப்பியேயாக வேண்டும்.

6. அருளுலக இருளனைத்தும் அகன்றிட இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரரின் அருளையும், அருளுரையையும் பெற்றிடுக.

7. அனைத்து நலிவு, மெலிவுகளுக்கும், அருட்கொடையால் நலம் பெறுக.

1. பரமாச்சாரியார் நெ.சேவுகன், குருகுலம்.
2. பிறமாச்சாரியார் சி.கவிக்குமார், பொன்னேரி.
3. தலைமைப்பீடம், சித்தர் கருவூரர், சென்னை.

**//மூல நகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



“... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் <u>குருவாணைப் படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org